அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.220

எனது இல.543ஈ665டி(தொகுதி 11)
தாபனப் பிரிவு
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1983 ஜூலை மாதம் 10 ஆந் தேதி.

செயலாளர்கள், திணைக்களத்
தலைவர்கள் யாவர்க்கும்.

முன்னர் நடைமுறையிலிருந்து இடமாற்ற முறையை
மீண்டும் செயற்படுத்துதல்.

ஏனைய விடயங்களோடு தாபனக் கோவையின் 111-ஆம் அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ள இடமாற்றச் சபையினதும் இடமாற்றத் திட்டங்களினதும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தும் முகமாக வெளியிடப்பட்ட 181-ஆம் இலக்கத்தையும் 31-10-1980ஆம் திகதியையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையைப் பார்க்க.

...2/

02. தாபனக் கோவையின் 111-ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட இடமாற்றச் சபையும், இடமாற்றத் திட்டமும் முன்னர் இயங்கி வந்தது போலவே மீண்டும் செயற்படவேண்டுமென இப்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. தேவையேற்படும் பொழுது இடமாற்றங்களைச் செய்வதற்கு வசதியாக மேற்குறித்த தீர்மானத்தை 1-1-1984ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.